**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.க.தர்ப்பகராஜ், இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.அ3/3378/2020** **நாள்: 30.05.2024.**

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருப்பத்தூர் மாவட்டம் – வன அலுவலகத்தில் ஓட்டுநராகப் பணியாற்றி பணியிடையே 28.07.2008 அன்று காலஞ்சென்ற திரு.கோதண்டன் என்பவரின் மகன் திரு.கௌதம் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – தொடர்பாக.

படிக்க:

01. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள்.ந.க.அ3/3378/2020, நாள்.18.10.2021.

02. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறைகள்.ந.க.அ3/3378/2020 நாள்.01.11.2021.

03. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ–1) துறை நாள்:08.03.2023.

04. மனித வள மேலாண்மைத் (G2) துறையின் கடித எண்.5532/G2/2023–1 நாள்:20.09.2023.

05. கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ஆ.கு.3/4600/2024 நாள்:20.02.2024

******

**ஆணை:–**

திருப்பத்தூர் மாவட்டம், வன அலுவலகத்தில் ஓட்டுநராக பணியாற்றி பணியிடையே 28.07.2008 அன்று காலஞ்சென்ற **லேட்.கோதண்டன்** என்பவரின் மகன் **திரு.கோ.கௌதம்** என்பவருக்கு பார்வை –1 (ம) 2–இல் கண்டுள்ள செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் **இளநிலை வருவாய் ஆய்வாளராக** பணிநியமனம் வழங்கப்பட்டது. அதன்படி தனியர் 09.11.2021 பிற்பகல் திருப்பத்தூர் தனிவட்டாட்சியர்(ஆதிந) அலுவலகத்தில் பணியில் சேர்ந்து தற்போது திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தனி வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை 3-இல் கண்டுள்ள அரசாணை மற்றும் பார்வை 4 (ம) 5-இல் கண்டுள்ள கடிதங்களில் காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கிய பணி நியமன அலுவலரால் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து **திரு.கோ.கௌதம்** என்பவர் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியில் சேர்ந்த நாளான **09.11.2021 பிற்பகல்** முதல் தமிழ்நாடு அமைச்சு பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தனியருக்கு தகுதிகாண் பருவம் துவக்கியும், மேலும் தனியாது தகுதிகாண் பருவம் மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

3) சம்மந்தப்பட்ட நபரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகளை சம்மந்தப்பட்ட அலுவலர் மேற்கொள்ள வேண்டியது.

ஒம்/-க.தர்ப்பகராஜ்.
மாவட்ட ஆட்சியர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

//உத்தரவுப்படி// U. 30/05/2024 (2/4)

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது),
திருப்பத்தூர்.

பெறுநர்.
சம்பந்தப்பட்ட நபர்.
நகல்: வட்டாட்சியர், திருப்பத்தூர்.
நகல் : "அ3" இருக்கைக்கு.

30/05/24